**O.S.No.44/2022**

வா.சா.1, திருமதி.மகேஷ்வரி
நாள் : 05.06.2025 நேரம் : 02.55 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)பிரதிவாதியுடன் நான் தாவா சொத்தை வாய்மொழி வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி ஒப்பந்தம் 2016ம் ஆண்டு செய்யப்பட்டது. நாளது தேதிவரை தாவா சொத்தின் உரிமையாளரிடம் வாடகைக்கு இருப்பது சம்மந்தமாக நான் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமையாளர் என்னை தாவா சொத்திலிருந்து வெளியேற்றுவதற்காக பிரதிவாதி என்மீது மாண்புமிகு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 157/2024 வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்தின் உரிமையாளருக்கு பிரதிவாதி தான் பொது அதிகார முகவராக உள்ளார் என்றால் சரிதான்.

2)எனக்கும், பிரதிவாதிக்கும் வாடகை சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் நான் வாடகை தொகையை மணி ஆர்டர் அனுப்பியதாக சொல்லப்படும் ஆவணம் தான் **வா.சா.ஆ.5** என்றால் சரிதான். மேற்படி மணி ஆர்டர் 05.07.2022ம் தேதி அனுப்பப்பட்டது. அந்த மணி ஆர்டர் திருப்பபட்ட பிறகு பிரதிவாதியிடம் வாடகை செலுத்துவதற்கு வசதியாக வங்கி கணக்கு விவரங்கள் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. அன்றைய தேதியிலிருந்து நான் வாடகை செலுத்தவில்லை. மேற்படி சம்பவத்திற்கு பின் நான் இரண்டு மாதங்களில் தாவா சொத்திலிருந்து காலி செய்வதாக ஒப்புகொண்டேனா என்றால் இல்லை, என்னை மிரட்டியதால் தான் நான் அவ்வாறு காலி செய்வதாக கூறினேன்.

3)தாவா சொத்தை பொறுத்து உண்மையான மாத வாடகை ரூ.6,400/- என்றும், வழக்கிற்காக ரூ.5,000/- என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும்

சரியல்ல. என்னை பிரதிவாதி அடிக்கடி தாவா சொத்திலிருந்து காலி செய்ய சொன்னதால் நான் மன உளைச்சலுக்கு உள்ளாகி தற்கொலை செய்ய முயற்சித்தேன் என்பது வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை உண்மையில் அவ்வாறு தாவா சொத்திலிருந்து வெளியேர மிரட்டல் ஏதும் அளிக்கவில்லை என்றாலும், அவ்வாறு மிரட்டியிருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தின் பராமரிப்பாளர் என்றும், உண்மையான உரிமையாளர் அல்ல என எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 தான் நான் பிரதிவாதிக்கு என்னை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற கூடாது என்று வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்று சொன்னால் சரிதான்.

4)மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்திலும், பிரதிவாதியிடம் நான் தாவா சொத்தின் உரிமையாளரின் விவரங்களை கேட்டு வாடகை ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொள்ள முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லாமல் 3ம் நபரின் சொத்தில் வாடகைக்கு இருக்க முடியாது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை முறையாக பராமரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது முதல் தளத்தில் 2 வீடுகளாக உள்ளது என்று சொன்னால் சரிதான். தற்சமயம் தாவா சொத்தான மேற்படி 2 வீடுகளில் ஒரு வீட்டிற்கு மட்டும் தான் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மற்றொரு வீட்டின் மின் இணைப்பை முறையாக மின் கட்டணம் செலுத்தாதால் தான் துண்டிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் வாடகைக்கு வரும்போது இரண்டு வீடுகளிலும் மின் இணைப்பு இருந்தது என்று சொன்னால் சரிதான்.

5)மாண்புமிகு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களின் உரிமையாளர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பினாரா என்றால் இல்லை. நான் மேற்படி எனக்கு சார்பு வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி அந்த வழக்கின் எதிருரையில் கூறியுள்ளேன்

என்றால் இல்லை. நான் 2016ம் வருட காலத்தில் முதுகுளத்தூரில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி கடந்த 2023ம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு சொந்த ஊர் காத்தாகுளம், முதுகுளத்தூர் அல்ல. ஆனால் கடந்த 50 வருடங்களாக நான் முதுகுளத்தூரில் தான் குடியிருந்து வருகிறேன். நான் வாடகை சொத்தை முறையாக பராமரிக்காத காரணத்தினாலும், ஒழுங்காக மாத வாடகை செலுத்தாததினாலும், எழுத்து பூர்வமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சி செய்யாத காரணத்தினாலும், நான் வாடகைதாரர் என்ற உரிமையை இழந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் என்னை வழக்கு சொத்திலிருந்து காலி செய்ய வழக்கு தாக்கல் செய்த பின்னரும், தாவா சொத்தின் உண்மையான உரிமையாளரை பற்றி தெரிந்தும் நான் அவரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும் சரியல்ல.

6)நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு ரூ.5,00,000/- முன்பணம் செலுத்தியது பற்றி எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், அது வாய்மொழியாக ஏற்பட்ட ஒப்பந்தம். நான் மாண்புமிகு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் எழுத்து மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொல்லிவிட்டு தற்போது வாய்மொழியாக ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்று மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாடகை சொத்தில் எதற்காக வாய்மொழி ஒப்பந்தம் ஏற்படுத்தி குடியிருந்து வந்தேனோ அந்த ஆசிரியர் பணியில் தற்போது இல்லை எனவும், முதுகுளத்தூர் எனது சொந்த ஊர் இல்லாத காரணத்தினாலும், நான் வாடகைதாரர் தகுதியை இழந்துவிட்ட காரணத்தினாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.27 P.M

சாட்சியின் கையொப்பம்